**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 11** |
| **Name** | : | **திரு. கருப்பையா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.03.2024**

எதிரி-1,2 ஆஜர். எதிரிகள் 3 முதல் 6 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை கீழகுயில்குடியில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். இறந்தது தெரியாது. போலிசார் வரச்சொன்னதன் பேரில் நீதிமன்றத்திற்கு வந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.3 ஆகும்.** அந்த கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்..

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போலிசார் விசாரணையின் போது, கடந்த 04.02.2017 ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் நானும் பெரியசாமி மகன் ஆறுமுகம் என்பவரும் வீட்டின் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது, போலிசார் அங்கு வந்து விசாரணை செய்து, சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் ஆறுமுகம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றும் நோக்கில் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை